


செங்கல்பட்டு மாவட்டம், சித்தாமூர் ஊராட்சி ஒன்றியம், புத்திரன்கோட்டை ஊராட்சியில் உள்ளாட்சிகள் தினத்தினை முன்னிட்டு நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டார். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தி.சினேகா, காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், செய்யூர் சட்டமன்ற உறுப்பினர் மு.பாபு, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் செம்பருத்தி துர்கேஷ், மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, நேற்று (01.11.2025) அமைச்சர் பி.கே.சேகர்பாபு , இராயபுரம் மண்டலம், வார்டு55, போர்ச்சுகீஸ் சர்ச் தெருவில் உள்ள சென்னை நடுநிலைப்பள்ளியில் பழுதடைந்த கட்டிடத்தை மட்டும் இடித்து, தரைத்தளத்தில் 5 எண்ணிக்கையிலான வகுப்பறைகள் மற்றும் சமையல் கூடத்துடன் கூடிய புதிய கட்டிடம் அமைக்கும் பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், மேயர் ஆர்.பிரியா, மண்டலக் குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு, துணை ஆணையர் கட்டா ரவி தேஜா, மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க. ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு

# எழும்பூர் வடக்குப் பகுதியில் ‘அன்னம் தரும் அமுதக் கரங்கள்’ நிகழ்ச்சி!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு பங்கேற்பு !

சென்னை நவ:2

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர், நம் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் 72.வது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க., சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழா!

நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டம் அன்னம் தரும் அமுத கரங்கள் என்ற தலைப்பில் தொடர்ச்சியாக 256 ஆம் நாள் நிகழ்ச்சி

மாவட்ட கழக செயலாளர்,இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஏற்பாட்டில் எழும்பூர் வடக்கு பகுதி

செயலாளர் சொ.வேலு எம்.சி, 78வது வட்டக் கழக செயலாளர் ச. மனோகர் முன்னிலையில் இன்று ( 2.11.2025 ஞாயிற்றுக்கிழமை ) காலை 7:00 மணி அளவில் எழும்பூர் வடை பகுதி, தானா தெரு, முத்து மருந்தகம் அருகில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் எழும்பூர் வடக்கு பகுதிக்கு உட்பட்ட மாவட்ட கழக; பகுதி கழக நிர்வாகிகள்; வட்ட கழக நிர்வாகிகள்; மாவட்ட; பகுதி பிரதிநிதிகள்; மாவட்ட; பகுதி; வட்ட அணிகளின் நிர்வாகிகள்; வட்ட கழக செயற்குழு உறுப்பினர்கள்; மகளிர்;பாகமுகவர்கள் BLA 2; BDA; BYO; இளைஞர்கள்; கழக உடன்பிறப்புகள் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.இவ்வாறு சமூக வலைத்தளம் வட்ட அமைப்பாளர் தகவல் தொழில் நுட்ப அணி இ. ராஜ்குமார் கேட்டுக் கொண்டுள்ளார்.

### ச.அரவிந்த்ரமேஷ் எம்.எல்.ஏ. – தொகுதிப் பார்வையாளர் டாக்டர் நா.சந்திரபாபு பங்கேற்பு

# புனிததோமையார் மலை தெற்கு ஒன்றியக் கழக ஆலோசனைக் கூட்டம்!

## ஒன்றியச் செயலாளர் கோவிலம்பாக்கம் ஜி.வெங்கடேசன் அறிக்கை!

சென்னை, நவ. 2 -

புனிததோமையார்மலை தெற்கு ஒன்றிய கழக செயலாளர் கோவிலம்பா க்கம் ஜி வெங்கடேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு

புனித தோமையர் மலை தெற்கு ஒன்றியக் கழக ஆலோசனைக் கூட்டம் இன்று (2-11-2025) காலை 10.00 மணி அளவில் கோவிலம்பாக்கம் காமாட்சி திருமண மண்ட பத்தில் ஒன்றிய அவைத் தலைவர் S.ரவி தலைமையில் ஒன்றிய கழக நிர்வாககிகள் மனோ நிதி, போஸ், சமாதானம் நல்லமுத்து, த.டில்லிபாபு, கே.குமார், சொக்கலிங்கம், G.M.ஏழுமலை ஆகியோர் முன்னிலையில் ஒன்றிய பெருந்தலைவர் சங்கீதா பாரதி ராஜன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் J.E. பாண்டியன் ஆகியோர் வரவேற்புரையில் கிளை கழக செயலாளர்கள், BLA2 (பாகமுகவர்கள்), BDA (பூத் டிஜிட்டல் ஏஜென்ட்டு) நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் லயன் ச.அரவிந்த்ரமேஷ், எம். எல்.ஏ., சோழிங்கநல்லூர் தொகுதி பொறுப்பாளர் டாக்டர் நா.சந்திரபாபு ஆகியோர் SIR என்ற மக்கள் விரோத நடவடிக்கைகளை முறியடித்து 2026ஆம் ஆண்டு நடைபெற உள்ள தேர்தல் குறித்து ஆலோசனை வழங்க உள்ளார்கள்.

இக்கூட்டத்தில் ஒன்றியத்திற்கு ட்பட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள் அனைத்து கிளை கழக செயலாளர்கள், BLA2, BDAக்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு ஒன்றிய கழக செயலாளர் கோவி லம்பாக்கம் G. வெங்கடேசன் கேட்டுக் கொண்டுள்ளார்.

# துறைமுகம் தொகுதி பாக ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டம்!

## தொகுதி பார்வையாளர் இரா.நரேந்திரன் சிறப்புரை! பகுதி செயலாளர்கள் எஸ்.முரளி, எஸ். இராஜசேகர் பங்கேற்பு!

சென்னை, நவ.2-

திராவிட மாடல் அரசின் வெற்றி நாயகர் கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற ‘என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச் சாவடி’ பயிற்சிக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆலோசனைப் படி துறைமுகம் சட்டமன்றத் தொகுதி பாக ஒருங்கி ணைப் பாளர்கள் ஆலோசனை கூட்டம் நேற்று (01.11.2025 - சனிக்கிழமை) மாலை 6.00 மணியளவில் சட்டமன்ற உறுப்பினர் வளாகத்தில் பகுதி செயலாளர்கள் எஸ். முரளி, எஸ்.இராஜசேகர் முன்னிலை யில் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் இரா.நரேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

பாக ஒருங்கிணைப்பாளர்கள் ஆற்ற வேண்டிய கடமைகளை விளக்கி கூறி சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் பொதுக்குழு உறுப்பினர்கள் பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதி கள், பாக ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

### கலாநிதி வீராசாமி எம்.பி., ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ., கே.வி.லோகேஷ் பங்கேற்பு !

# ஆர்.கே.நகர் மேற்குப் பகுதி பாக முகவர்கள் கூட்டம் !

## ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., ஆலோசனை வழங்குகிறார் ! எஸ்.ஜெபதாஸ்பாண்டியன் அறிவிப்பு !

சென்னை, நவ.2

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதி எஸ். ஜெபதாஸ்பாண்டியன் அறிவிப்பு வருமாறு:

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, துணை முதலமைச்சர் அறிவுறுத்தலின்படி “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச் சாவடி” SIR வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த ஆலோசனைக் கூட்டம் நாளை (03.11.2025 திங்கட்கிழமை) மாலை 6.00 மணியளவில் கொருக்குப் பேட்டை மரியம் மாளிகையில் பகுதி அவைத்தலைவர் மாஸ் டி.வெங்கடேசன் தலைமையில் நடைபெறுகிறது. எம்.கோவிந்தராஜ், எம்.லோகநாதன், டி. திராவிடசெல்வி, பி.ரீனிவாசன், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

நேதாஜி யு.கணேசன் எம்.சி, எஸ்.எல்.சுந்தர், கி. தேவன், ஆர்.ஏ.எம். சசிகுமார், ஜி.ஏழுமலை, ஆர். ராஜன், ஆகியோர் வரவேற்கின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, கலந்துகொண்டு ஆலோசனை வழங்குகிறார்.

டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, தொகுதி பொறுப்பாளர் கே.வி. லோகேஷ், ஆகியோர் பங்கேற்கின்றனர்.

இதில் ஆர்.கே.நகர் மேற்கு பகுதி மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதி கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்ட நிர்வாகிகள், பாக ஒருங்கிணைப்பாளர்கள், பாகமுகவர்கள், பாக இளைஞர் அணி நிர்வாகிகள், பாக தகவல் தொழில்நுட்ப அணி, கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பகுதிச் செயலாளர் எஸ்.ஜெபதாஸ் பாண்டியன் தெரிவித்துள்ளார்.



திருவள்ளூர் – அரக்கோணத்திற்கு இடையே 9.2 கி.மீட்டர் தூரத்திற்கு இரு வழிச் சாலையை நான்கு வழிச்சாலையாக ரூ.82 கோடி மதிப்பீட்டில் அகலப்படுத்தி யேம்படுத்தபட்ட சாலையை முதல்வர் காணொளி மூலம் திறந்து வைத்தார். இதனை தொடர்ந்து வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ. புதிய சாலையை பார்வையிட்டு பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார். இதில் கோட்ட பொறியாளர் சிற்றரசு, உதவி கோட்ட பொறியாளர் ரகுராமன்,ஒன்றிய செயலாளர் எஸ். மகாலிங்கம் உதவி பொறியாளர் ஞான அருள்ராஜ், , நிர்வாகிகள் சி.ஜெயபாரதி, எம்.பன்னீர்செல்வம், ஆர்.ராஜா, தினகரன், ரமேஷ், சண்முகம், நீலாவதி சீனிவாசன், ஹரிபாபு, குமார். நந்தகுமார்உள்பட பலர் உள்ளனர்



துறைமுகம் சட்டமன்றத் தொகுதி பாக ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் பகுதி செயலாளர்கள் எஸ். முரளி, எஸ். இராஜசேகர் முன்னிலையில் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் இரா. நரேந்திரன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் பொதுக்குழு உறுப்பினர்கள் பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், பாக ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 255 வது நாள்!

## கொளத்தூர் கிழக்குப் பகுதியில் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை, நவ. 2 -

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 255 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (01.11.2025), கொளத்தூர் கிழக்கு பகுதி: 1) வட்டம் 67, பேப்பர் மில்ஸ் ரோடு, ESI மருத்துவமனை தெரு. 2) வட்டம் 68 அ, KC கார்டன், 4 ஆவது தெரு, பெரவள்ளூர், சென்னை ஆகிய பகுதிகளில் மாண்புமிகு இந்து சமய அறநிலை யத்துறை அமைச்சர் திரு.பி. கே.சேகர்பாபு அவர்கள் தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.



இந்நிகழ்ச்சியில் பகுதிச் செயலாளர்கள் ஐ.சி. எப்.வ.முரளிதரன், எ.நாகராசன் மற்றும் கே.சந்துரு, சி.மகேஷ்குமார், தேவஜவகர், சரிதா மகேஷ்குமார், எஸ்.பன்னீர்செல்வம், துரை கண்ணன், ம.அசோக்குமார், ஆர்.எஸ்.சித்திக், எஸ். தனசேகர், D.யோகப்பிரியா, என்.தாவூத் பீ, P.அமுதா, சி.ஸ்ரீதணி, வட்ட கழக செயலாளர்கள்: P.ஊமைத்துரை, கே.பி.ஆதவன்மணி, என்.பொன்முடி, கே.ஜார்ஜ் குமார், பி.டி.சி.எஸ்.ரவி, பா.அன்பரசு, டி.சந்திர சேகர், எஸ்.முருகன், எம். பி.தமிழ்ச்செல்வன், என். சௌந்தர், என்.பவுல்ராஜ், என்.இராமச்சந்திரன், எம். ஜெ.சி.பாபு, பி.அதிபதி. ஒருங்கிணைப்பாளர்கள்: சொ. வேலு, S.முரளி, R. ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம. அசோக்குமார், L. சம்பத்கு மார், க.பா.பிரதீப் குமார், அன்பரசன், ஆதவன் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ. – க.தனசேகரன் எம்.சி. பங்கேற்பு!கலைஞர்நகர் தெற்குப் பகுதி,

# 136, 137அ, 138 வட்ட பாக முகவர்கள் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் கே.கண்ணன் அறிவிப்பு

சென்னை, நவ. 2 -

தமிழ்நாடு முதல்வர், கழக தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, சென்னை தெற்கு மாவட்ட செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா._சுப்ரமணியன் ஆலோசனைப்படி, புதிதாக இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள SIR வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் சம்பந்தமாக, விருகம்பாக்கம் தொகுதி, கலைஞர்நகர் தெற்கு பகுதி திமுக சார்பில் வட்டம் வாரியாக பாக முகவர்கள் கூட்டம் நடைபெறுகிறது என்று பகுதிச் செயலாளர் கே. கண்ணன் அறிவித்துள்ளார்.

அது வருமாறு;

இன்று (02.011.2025 ஞாயிறு) காலை 11 மணியளவில் 136வது வட்ட பாகமுகவர்கள் கூட்டம், வட்ட செயலாளர் பூக்கடை ஆர். பழனிச்சாமி தலைமையில் ராணி அண்ணா நகர் 12 பிளாக் எதிரில் உள்ள வட்ட செயலாளர் இல்லத்திலும், 137அ வட்ட பாக முகவர்கள் கூட்டம், வட்ட செயலாளர் வழக்கறிஞர் சதீஷ்கண்ணன் தலைமையில் அண்ணா பிரதான சாலையில் உள்ள ஏகே அறக் கட்டளை அலுவலகத்திலும், 138வது வட்ட பாகமுகவர்கள் கூட்டம், வட்ட செயலாளர் சோ. செந்தில்குமார் தலைமையில் 32/77, அண்ணா பிரதான சாலையில் உள்ள கலைஞர்நகர் தெற்கு பகுதி அலுவலகத்திலும் நடைபெற உள்ளது.

விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, கணக்குநிலைகுழு தலைவர் க. தனசேகரன், பகுதி செயலாளர் கே.கண்ணன், தொகுதி பொறுப்பாளர் வே.உமாகாந்த் ஆகியோர் புதிய வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் சம்பந்தமாக பாக முகவர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் பற்றி ஆலோசனை வழங்க உள்ளனர்.

எனவே 136,137அ, 138 பாக பொறுப்பாளர்கள், பகுதி நிர்வாகிகள் கலந்து கொள்ளும் இதில் அந்தந்த வட்டத்தின் வட்ட நிர்வாகிகள், பாக முகவர்கள் அனைவரும் கண்டிப்பாக கலந்து கொள்ளுமாறு பகுதிச் செயலாளர் கே. கண்ணன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# ஆரணி பேரூரில் என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச்சாவடி நிகழ்ச்சி!

## பி.முத்து ஏற்பாட்டில் க.ரமேஷ் தலைமை! ரோஸ் பொன்னையன் பங்கேற்பு

திருவள்ளூர், நவ. 2 -

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் ஆரணி பேரூராட்சியில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் எம்.எஸ். கே. ரமேஷ்ராஜ் அறிவுறுத்தலின் பேரில் என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச்சாவடி நிகழ்ச்சி வார்டு எண் பத்தில் பேரூர் கழக செயலாளர் பி.முத்து ஏற்பாட்டில், அவை தலைவர் வழக்கறிஞர் க.ரமேஷ் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஜி.பி.வெங்கடேசன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் எஸ். ரோஸ் பொன்னையன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் பேரூர் கழகத்தின் பொருளாளர் ஜி. கரிகாலன். துணைச் செயலாளர் ஆர். கலையரசி. பேரூராட்சி மன்ற கவுன்சிலர் என். ரகுமான்கான், பேரூராட்சி மன்ற கவுன்சிலர் சுபாஷினி ரவி, மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் எல். உதயகுமார், வார்டு செயலாளர்கள் சி.நீலகண்டன், கே.சூர்யா, பி. எல் ஏ 2 டைலர் பழனி, பி டி ஏ கௌரிசங்கர், பிஎல்சி நிர்வாகிகள் ராம்குமார், வெங்கட், டிரைவர் வெங்கட், ட்ரிபிள் கே.கருணா, வள்ளி, முத்துலட்சுமி, இலக்கிய அணி அமைப்பாளர் ஜி பாஸ்கர், தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ஜி.சந்தோஷ், பிரபா சிறுபான்மையனிர் அமைப்பாளர் எம்.சுல்தான், எஸ். பி. உமாபதி. ஈஷா ஜாவித். கணேசன். பொறியாளர் அணி அமைப்பாளர் பி. பிரபாகரன். வார்டு செயலாளர்கள் இளங்கோவன். வழக்கறிஞர் அணி அமைப்பாளர் சுரேந்தர் உள்ளிட்ட அந்த வார்டு நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்

இறுதியாக சி. நீலகண்டன் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.



காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதி, வாலாஜாபாத் ஒன்றியம், ஈஞ்சம்பாக்கம் ஊராட்சியில் நடைபெற்ற ”நலன் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமை சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. துவக்கி வைத்து, பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன், ஒன்றியச் செயலாளர் பி.எம். பாபு, ஒன்றியக் கழக நிர்வாகிகள், சுகாதாரத் துறை இயக்குநர் மற்றும் அலுவலர்கள், மருத்துவர்கள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், ஏராளமான பொதுமக்கள் கலந்துக் கொண்டனர்.



மாதவரம் வடக்கு பகுதி 17 வது வட்டம் அரியலூர் சென்னை மாநகராட்சி துவக்கப் பள்ளியில் அடிப்படை தேவைகள் மற்றும் வசதிகள் குறித்து உதவி பொறியாளர் தினேஷ் மற்றும் யுவராஜ் ஆகியோருடன் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நேரில் சென்று ஆய்வு செய்தார். பள்ளிக்குத் தேவையான அடிப்படை வசதிகள் குறித்தும், காலை உணவு வழங்கப்படும் முறைகள் அதனுடைய தரம் குறித்தும் பள்ளி தலைமை ஆசிரியர் மாணவர்களிடம் கேட்டறிந்தனர். 17வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன், எஸ்.பாலாஜி, சி. மூர்த்தி, டி. வினோத், எஸ். நாகராஜ், டி. திவாகர் நிர்வாகிகள் உடன் உள்ளனர்.